பஞ்சாயத்து யூனியன்கள்

*123 **வின—திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி பஞ்சாயத்து யூனியனுக்கு ஏப்ரல் மாதம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் விஜயம் செய்து எதேனும் பைல்கள் எரிக்கப்பட்டது சம்பந்தமாக விசாரணை செய்தாரா ?

(இ) ஆம் என்ருல், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இதற்குக் காரணமாக இருந்த சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : அங்கே தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, சில பஞ்சாயத்துத் தலைவர்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிருர்கள். அதேபோல பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்த ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர்கள் பணத்தைக் கையாடல் செய்ததாகத் தகவல் இல்லை. சில தேவைகளுக்காக பணத்தை எடுத்து செலவழிக்காமல் வைத்திருந்ததாக கோட்டாட்சித் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. முழுத் தகவல்கள் கிடைத்ததும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : தலைவர் அவர்களே, கமுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர் செங்கல் காளவாய் நடத்தியதாகவும், மூன்று பஞ்சாயத்துத் தலைவர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்பட்டார்கள். யூனியன் தலைவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கனம் அங்கத்தினருடைய கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் கூறியிருக்கிறேன். தகவல் கோட்டாட்சித் தலைவரிடமிருந்து வந்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், பஞ்சாயத்து யூனியன் தலைவர் எந்தெந்த அயிட்டமான பணங்களை எடுத்துக் கையிலே வைத்திருந்தார் என்பதை அமைச்சர் அறிவாரா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதுபற்றிய முழு விவரமும் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பெரிய பிரமுகர்கள் பைல்களை எரித்தபோது அவர்களை விட்டுவிட்டதன் காரணமாக, இது தொடர்ந்து நடக்கிறது என்பது அமைச்சர்களுக்கு தெரியுமா ? இது பற்றித் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

** ** ** **

திரு. கரு. சீமைச்சாமி : மூன்று ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள செங்கல் காளவாய் நடத்திய மூன்று பஞ்சாயத்து தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, யூனியன் தலைவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிருர்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கனம் உறுப்பினர் கேள்விக்கு மூன் ஒரு கேள்வியில் பதிலளித்துள்ளேன். தகவல்கள் கேட்கப்பட்டுள்ளது. பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.